**செ.வெ.எண்: 39** **நாள்:16.10.2019**

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டம் முழுவதும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் செய்யப்பட்டுள்ளது - அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமைனையில் ஆய்வு செய்தபின் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறை குறித்தும், டெங்கு தடுப்பு பிரிவில் உள்நோயாளிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப அவர்கள் இன்று (16.10.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மருத்துவமனைக்கு வரும் மக்களுக்கு நோய் தொற்று ஏற்படாத வகையில், நுழைவுவாயில் பகுதியில், மருத்துவமனையை விட்டு வெளியே செல்லும் நபர்கள் கண்டிப்பாக கைகளை சுத்தமாக கழுவியபிறகே செல்வதற்கு ஏற்ற வகையில் கைகழுவுவதற்கான இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததையும், பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று கைகழுவிவிட்டு சென்றதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

மேலும், மருத்துவமனைக்கு வரும் அனைவருக்கும் நிலவேம்பு கசாயம் வழங்கப்படுவதை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயத்தை வழங்கி, தானும் அருந்தினார்.

அதனைத்தொடர்ந்து டெங்கு தடுப்பு பிரிவில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள உள்நோயாளிகளையும், பிற காரணங்களுக்காக தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறை குறித்தும் விரிவாக கேட்டறிந்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டம் முழுவதும் டெங்கு தடுப்பு பணிகள் தீவிரமாக செய்யப்பட்டு வருகின்றது. அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காய்ச்சல் என்று வரும் நபர்களுக்கு முழுமையாக தீவிர பரிசோதனைகள் செய்யப்பட்டு டெங்கு உள்ளதா, இல்லை சாதாரண காய்ச்சலா என்பது முதலில் உறுதிசெய்யப்படுகின்றது. தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப்பகுதிகளில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளதாக கருதப்படும் பகுதிகள் சரிசெய்யப்பட்டு வருகின்றது.

அனைத்துப்பகுதிகளிலும், டெங்கு தடுப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொதுமக்களுக்கும் தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு காய்ச்சல் காரணமாக சராசரியாக 300 நோயாளிகள் வருகின்றனர். அவ்வாறு வரும் நபர்களை ஆரம்ப நிலையிலேயே முழு உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் இருக்கின்றதா என்பது உறுதிசெய்யப்படுகின்றது. இதுவரை, ஒரு சிறுமிக்கு மட்டும் டெங்கு காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த சிறுமி மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் உள்ளார். நல்ல நிலையில் உள்ளார். மழைக்காலம் என்பதால் ஜலதோசத்தால் ஏற்படும் காய்ச்சல், வைரல் காய்ச்சல் என பல்வேறு காய்ச்சல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார்

இந்நிகழ்வின்போது, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரோஸிவெண்ணிலா, சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.பாக்யலெட்சுமி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.